ISSN:2582-9599



# ஈரோடு மாவட்ட வேட்டுவக் கவுண்டரின மக்களின் பிறப்புச் சடங்குகளில் பண்பாட்டு மரபுகள்

**க.சுந்தராம்பாள் & முனைவர் ம.சுந்தரமூர்த்தி,**
**தமிழ்த்துறை, பெரியார் பல்கலைக்கழகம், சேலம் – 11.**

**ஆய்வுச்சுருக்கம்**

காலத்தின் சுவடுகளைக் காலங்கள் கடந்தும் நிலைத்திடச் செய்வது இலக்கியங்களாகும். ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த மக்களின் வாழ்க்கை நெறிமுறைகளையும், சமூகப் பின்னணிகளையும் நாட்டுப்புற இலக்கியங்கள் பறைசாற்றுகின்றன. ஒரு சமூகத்தின் வாழ்க்கை முறையில் காணப்படும் சடங்குகள், பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள், வழிபாட்டு முறைகள் பண்பாட்டு மரபுகள் ஆகியன ஒரு குழுவினரால் பகிர்ந்து கொள்ளப்படுவதே 'பண்பாடு' எனப்படும். இப்பண்பாட்டு மரபுகள் உலகில் வாழும் அனைத்து இன மக்களிடமும் இனத்திற்கு இனம் வேறுபட்டுக் காணப்படுகின்றன. இவ்வேறுபாடுகள் தான் ஓர் இனத்தின் தனித்த பண்பாட்டு அடையாளங்களாகவும் நிலைபெறுகின்றன. வழிவழியாகக் கடைபிடிக்கப்பட்டு வரும் சில பண்புகளின் எச்சங்களை ஒரு சமூகம் தன்னகத்தே கொண்டிருக்கும். அதன் மூலம் அச்சமூகத்தின் முன்னோர்கள் பின்பற்றிய மரபுகளைத் தெரிந்து கொள்ள இயலும். நாட்டுப்புறப் பண்பாட்டில் அறிவியலின் தாக்கங்கள் இன்று மக்களை ஆட்கொண்டாலும், தம் இன மக்களிடம் நிலவும் மரபு சார்ந்த பண்பாட்டுக் கூறுகளை மக்கள் ஒருபோதும் முற்றிலும் மறந்து விடுவதில்லை. அதன் எச்சங்கள் பல தலைமுறைகள் கடந்தும் நிலைபெற சடங்குகள் உறுதுணை புரிகின்றன். சடங்குகள் சமூகத்தின் பண்பாட்டையும், பழமையையும், நம்பிக்கைகளையும் வெளிப்படுத்துகின்றன. நம்பிக்கையின் அடிப்படையில் தான் சடங்குகள் நிகழ்த்தப்படுகின்றன. செல்வங்களுள் முதன்மையானதாகக் கருதப்படும் பிள்ளைப்பேற்றின் பெருமையைப் போற்றும் வகையில் மேற்கொள்ளப்படும் சடங்குகள் பல வகைகளில் நிகழ்த்தப்படுகின்றன. ஒரு குழந்தை தாயின் கருவில் உருவானது முதல் அதற்குரிய சடங்குகள் தொடக்கம் பெறுகின்றன. அவ்வகையில் ஈரோடு மாவட்ட வேட்டுவக்கவுண்டரின மக்களின் பிறப்புச் சடங்குகளில்

பின்பற்றப்படும் பண்பாட்டு மரபுகளைப் பற்றி எடுத்துரைக்கும் நோக்கில் இக்கட்டுரை அமைகிறது.

**திரவுச் சொற்கள்**

பண்பாடு, மரபுகள், சடங்குகள், பச்சிலை மருந்து, கொடி சுற்றிப் பிறத்தல், மான் கொம்புத் தொட்டில் கட்டுதல், இழி பெயர்கள், பாச்சான்பால் சுற்றுதல், மாந்தம் குத்துதல், சுமைதாங்கிக் கல்.

**முன்னுரை**

மனித வாழ்வின் இன்றியமையாத செல்வமாகக் கருதப்படுவது குழந்தைச் செல்வமாகும். ஒருவருக்கு எத்தகைய செல்வம் இருப்பினும் அவனுடைய அடையாளமாகவும், பரம்பரையை நிலைநிறுத்துவதாகவும் கருதப்படுவது குழந்தைப்பேறாகும். பிறக்கும் குழந்தை நலமும் வளமும் பெற வேண்டியும், குழந்தையை நன்முறையில் இவ்வுலகிற்கு வரவேற்கும் விதமாகவும் நிகழ்த்தப்படும் சடங்கு பிறப்புச் சடங்காகும். குழந்தைப்பேறு கிட்டவில்லையெனில் சமுதாயத்தின் தூற்றுதலுக்கும், அவமரியாதைக்கும் ஆளாக நேரிடும் என்று கருதி குழந்தைப்பேறற்ற பெண்கள் மேற்கொள்ளும் பல நோன்புகளும் அவர்கள் கடைபிடிக்கும் நம்பிக்கைகளும் ஏராளம். மேலும் குழந்தைப்பேறு பெற்ற பின் பின்பற்றும் சடங்குகளும் பல வகைகளில் அமைகின்றன. இந்நம்பிக்கைகளும் சடங்குகளும் இன்றைய காலங்களிலும் மக்கள் வாழ்வில் இரண்டறக் கலந்துள்ளதை மறுக்க இயலாது. இத்தகைய குழந்தைப்பேறு வேண்டியும், குழந்தைப் பேறு பெற்ற பின்பு மேற்கொள்ளும் சடங்கியல்சார் செயல்பாடுகளில் ஈரோடு மாவட்ட வேட்டுவக் கவுண்டரின மக்கள் பின்பற்றும் பண்பாட்டு மரபுகள் குறித்து இக்கட்டுரை எடுத்துரைக்கின்றது.

**சடங்கு**

மனித இனம் தோற்றம் பெற்ற அன்றே சடங்குகளும் தோன்றியிருக்க வேண்டும். நாகரிகம் அடைந்த மனிதனின் வாழ்வில் முதன்முதலில் சில பழக்கங்கள் தோன்றி அவை காலப்போக்கில் முறைபடுத்தப்பட்டுச் சடங்குகளாக மாறியிருக்க வேண்டும். சடங்கு என்பது வாழ்வின் முக்கியமான நிகழ்வுகளைச் செம்மையான முறையில் ஓர் ஒழுங்கு முறையில் அழகாகச் செய்விக்கும் தன்மையுடையதாகும். மனிதன் பிறந்த வினாடி முதல் இறந்த பின்பும் தம் வாழ்க்கை முழுவதும் ஏதாவது ஓர் சடங்கைச் செய்து கொண்டே உள்ளதன் வழி சடங்குகளின் இன்றியமையாமை புலப்படுகிறது.

**பிறப்புச்சடங்கு**

பண்டைக்காலம் முதல் இன்று வரை மக்கள் குழந்தைப்பேற்றை மிகவும் சிறப்புடையச் செல்வமாகக் கருதினர். பிள்ளைப்பேற்றினை விட வேறு செல்வமில்லை என்று கருதி பிள்ளைப்பேற்றின் சிறப்பினை எடுத்துரைக்கும் திருவள்ளுவரும், ஒருவன் பெறும் நன்மக்கட்பேற்றை விட மற்றச் செல்வங்கள் பெரும் மதிப்புடையனவாக இல்லை என்று பிள்ளைப் பேற்றின் செல்வத்தைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். இதனை,

**"பெறுமவற்றுள் யாம்அறிவது இல்லை அறிவுஅறிந்த**

**மக்கட்பேறு அல்ல பிற"**[1] என்னும் குறளடி பிள்ளைப் பேற்றின் சிறப்பை விளக்கி நிற்கிறது. இவ்வாறு சிறப்புடைய குழந்தைப் பேற்றைப் பெறுவதற்கு முன்னும், பின்னும் பல சடங்குகள் மக்களால் மேற்கொள்ளப்படுகின்றன. அவை பின்வருமாறு விளக்கப்படுகின்றன.

**வளைகாப்பு**

கருவுற்ற பெண்ணின் சூழ்வளை காத்தற்பொருட்டு கருவுயிர்த்தப் பெண்ணிற்கு ஏழு அல்லது ஒன்பதாவது மாதத்தில் நிகழ்த்தப்படும் சடங்கு 'வளைகாப்பு' எனப்படும். இச்சடங்கு 'கட்டுச்சோறு கட்டுதல்' என்ற பெயரில் அழைக்கப்படுகிறது. கருவுற்ற பெண்ணின் தாய் வீட்டினரால் அப்பெண்ணின் கணவன் வீட்டில் நிகழ்த்தும் சடங்காகும்.

"வளைகாப்புத் தினத்தன்று மணமக்கள் இருவரும் தங்களின் திருமண நாளன்று அணிந்திருந்த முகூர்த்த ஆடையினை அணிந்து அலங்கரிக்கப்பட்டு மாலைகள் அணிவிக்கப்பட்டு வளைகாப்பு நிகழ்த்தும் இடத்தில் அமர வைக்கப்படுவர். வளைகாப்பு நிகழ்த்தும் இடத்தில் பூ, பழங்கள், இனிப்பு, கார வகை உணவுப் பொருட்கள், வளையல்கள் போன்ற பல வகையான பொருட்கள் வைக்கப்பட்டிருக்கும். வளைகாப்பிற்கு வந்திருக்கும் சுமங்கலிப் பெண்கள் அனைவரும் கருவுற்ற பெண்ணிற்கு கண்ணாடி வளையல்களை அணிவித்து பூ சந்தனம் மற்றும் குங்குமம் போன்றவற்றை வைத்து விடுவர். வளைகாப்பிற்கு வந்துள்ள அனைத்துப் பெண்களுக்கும் வளையல்கள் வழங்கப்படும். வளைகாப்பிற்கு உறவினர்கள் கூட்டமாக வருவதால் ஏதேனும் கிருமித்தொற்று ஏற்பட்டுவிடும் என்ற நோக்கில் பெண்ணின் கைகளில் சில வேப்பிலைக் கொத்துகள் கொடுக்கப்படுகின்றன. வேப்பிலை கிருமி நாசினி என்பதால் கருவுற்ற பெண்ணின் பாதுகாப்புக் கருதி வேப்பிலை கொடுக்கும் வழக்கம் மரபாகப் பின்பற்றப்பட்டு வருகின்றது. கருவுற்ற பெண்ணின் கைகளில் வெற்றிலை பாக்குடன் 'மொய்ப்பணம்' வைத்துக் கொடுக்கும் வழக்கமும் இவ்வின மக்களிடம் காணப்படுகின்றது.

இம்மொய்ப்பணம் அப்பெண்ணின் குழந்தைப் பேற்றிற்கு ஏற்படும் செலவைக் கருத்தில் கொண்டு அளிக்கப்படுகிறது.”[2] என்று தகவலாளர் பத்மா என்பவர் குறிப்பிடுகிறார். வளைகாப்பில் கலந்து கொண்டவர்களுக்கு ஐந்து அல்லது ஏழு வகையான உணவுகள் பரிமாறப்படுகின்றன. கருவுற்ற பெண்ணிற்கு அறுசுவை உணவுகளையும் உட்கொள்ளும் ஆசை ஏற்படுவதால் இச்சடங்கில் பல வகை உணவுகளும் பரிமாறப்படுகின்றன. குழந்தைப்பேறு என்பது ஒரு பெண்ணின் மறுபிறப்புப் போன்று கருதப்படுவதால் கருவுற்ற பெண்ணிற்கு முக்கியத்துவம் கொடுக்கும் நோக்கிலும் இச்சடங்கு உள்ளது.

**கண்ணாடி வளையல்களின் அவசியம்**

கருவுற்ற பெண் பொதுவாக மெல்ல நடந்து வரும் உடல்வாகைக் கொண்டிருப்பதால் அவள் நடந்து வரும்போது அவளின் பின் செல்பவர்கள் கருவுற்றப் பெண்ணின் வருகையினைப் புரிந்து கொண்டு அப்பெண்ணிற்கு எவ்விதப் பாதிப்பும் ஏற்படாத வகையில் ஒதுங்கிச் செல்வதற்கும், வயிற்றில் உள்ள குழந்தையின் செவித்திறன் உணர்வு நன்முறையில் இருக்கும் என்ற நம்பிக்கையின் அடிப்படையிலும், கண்ணாடி வளையல்களைத் தொடர்ந்து அணிவதால் கருவுற்ற பெண்ணின் மணிக்கட்டுப் பகுதியின் இரத்த ஓட்டத்தைச் சீராக வைக்க உதவுகிறது என்னும் காரணங்களுக்காகவும் கண்ணாடி வளையல்கள் அணிவது அவசியமாகிறது.

கருவுற்ற பெண் தன் தாய் வீட்டில் இருந்தால் மகிழ்வுடனும், ஓய்வு எடுக்கவும் ஏதுவாக அமையும் என்று கருதி அப்பெண்ணை தாய் வீட்டினர் தங்களின் இல்லத்திற்கு அழைத்துச் செல்வர். தாய் வீட்டில் தனது பெற்றோரின் முழு அரவணைப்பும், அன்பும் கிடைப்பதால் கருவுற்ற பெண்ணிற்கு மகிழ்ச்சியான சூழலும், பாதுகாப்புணர்வும் கிடைக்கும் என்பதாலும் பெற்றோரும் தங்கள் மகளின் குழந்தைப் பேற்றிற்கு உதவி புரிவதற்கு ஏதுவாக அமையும் என்று கருதி தாய் வீட்டிற்கு அழைத்துச் செல்வர்.

**பச்சிலை மருந்து கொடுத்தல்**

பெண்ணின் தாய் வீட்டில் இருக்கும் கருவுற்ற பெண்ணிற்கும், குழந்தைக்கும் எவ்விதமான பாதிப்பும் ஏற்படாமலிருக்க ‘மருந்து கொடுத்தல்’ என்ற சடங்கை நிகழ்த்துவர். “துளசி இலை, குப்பைமேனி இலை, மணத்தக்காளி இலை, வெற்றிலை ஆகிய நான்கு இலைகளையும் சிறிதளவு எடுத்து அவற்றின் சாற்றினைக் கருவுற்றப் பெண்ணிற்குக் கொடுத்து குடிக்கச் செய்வர். இதனால் கருவுற்ற பெண்ணிற்கு உடல் நலம் சீராக இருக்கும்”[3] என்று கருதி மருத்துவக் குணமுள்ள இலைகளின்

பயன்பாட்டைத் தம் முன்னோர்களின் காலம் முதற்கொண்டு இன்று வரை பின்பற்றிப் பயன்படுத்தி வருகின்றனர் என்று தகவலாளர் சித்ரா குறிப்பிடுகிறார்.

“கருவுற்றிருக்கும் மகளிர் கருவுற்ற நாளிலிருந்தோ அல்லது கருவுற்ற ஐந்தாவது மாதத்திலிருந்தோ தனித்தன்மை வாய்ந்த சில ஆசைகளை வளர்த்துக் கொள்ளத் தலைப்படுவர். பழ வகைகளையும், தின்பண்டங்களையும் தின்பதற்கும், அடர்ந்த நிலப்பகுதிகளிலும் சலசலவென நீர்ப்பாயும் தோட்டங்களிலும் உலவி வருவதற்கும், விலையுயர்ந்த ஆடைகளையும், அணிவகைகளையும் அணிந்து கொள்வதற்கும் இன்னோரன்ன பிறவற்றிற்கும் ஆசை கொள்வர். எந்தப் பெண்ணுக்காவது இத்தகைய ஆசை நிறைவேறாவிட்டால் அவள் கருவுயிர்க்கும் மகவு வலிமையற்றும், பெரும் வேற்கை உடையதாகவும் பிறக்கும் என்று நம்பப்படுகிறது”[4]. அக்கருத்தினடிப்படையில் பிறக்கும் குழந்தைக்குக் காதில் சீழ் வடியும் என்று கருதி கருவுற்ற பெண்ணை நடுப்பகல் வேளையில் முச்சந்தியில் நிற்க வைத்து நான் எதன் மீதும் ஆசைப்படவில்லை என்று மும்முறை உரக்கக் கூறித் தெருவில் உள்ள மண்ணை அள்ளி சிறிதளவு வாய் மற்றும் நெற்றியிலிட்டுக் கொள்ளச் செய்வர். மேலும் குழந்தைப்பேறு வாய்க்கப்பெறாத தம்பதியினரின் கண்ணேறும் காரணமாக இருக்கலாம் என்று எண்ணி கருவுற்ற பெண்ணிற்கு கண்ணேறு கழித்தலை மேற்கொள்வர்.

**சர்க்கரைத் தண்ணீர் கொடுத்தல்**

குழந்தை பிறந்த சில மணி நேரத்தில் குழந்தையின் வாயில் சில சொட்டு நாட்டுச் சர்க்கரை கலந்த நீரினை வைப்பர். குழந்தையின் உடலில் உள்ள தேவையற்ற கழிவுகள் குழந்தை வெளியேற்றும் மலம் வழியாக வெளியேறிவிடும் என்று கருதி இச்சர்க்கரைத் தண்ணீர் கொடுக்கப்படுகிறது. சர்க்கரைத் தண்ணீருக்குப் பதில் தேன் கொடுக்கப்படுவதும் உண்டு. “இவ்வின மக்கள் தங்கள் குடும்பத்தில் உள்ள ஒரு தம்பதியருக்கு ஆண் குழந்தை பிறந்தால் கற்கண்டும், பெண் குழந்தை பிறந்தால் இன்னட்டும் (சாக்லேட்) கொடுக்கும் மரபு வழக்கத்தில் உள்ளது. ஆண்குழந்தை கற்கண்டு போன்று வலிமையுடையதாகவும், பெண் குழந்தையானது இன்னட்டுப் போன்று மென்மைத் தன்மையுடையதாகவும் விளங்கும் என்று கருதி தங்களின் மகிழ்வினை மற்றவர்களிடத்தில் பகிர்ந்து கொள்வர். ஒரு சில நேரங்களில் பிறந்த குழந்தையைக் காண வருபவர்களுக்கு குழந்தையைக் காண அனுமதி மறுக்கப்படும் சூழலில் கற்கண்டு வழங்கப்பட்டால் பிறந்துள்ள குழந்தை ஆண் என்றும், இன்னட்டு வழங்கப்பட்டால் பிறந்துள்ள குழந்தை பெண் என்றும் உணர்ந்து கொள்ள ஏதுவாக

இத்தகைய இனிப்பு வழங்கும் முறை தற்காலத்திலும் இம்மக்களிடம் காணப்படுகிறது”[5] என்பது அலமேலு என்னும் தகவலாளரின் கூற்றின் வழி அறியமுடிகிறது.

**குழந்தை கொடி சுற்றிப் பிறத்தல்**

குழந்தை பிறக்கும் போது தொப்பூழ்க் கொடி அதன் உடலைச் சுற்றிக் கொண்டிருக்கும். சில குழந்தைகளுக்கு கழுத்தையும் இணைத்தவாறு தொப்பூழ்க்கொடி சுற்றிக் கிடப்பதுண்டு. அவ்வாறு கொடி சுற்றிப் பிறக்கும் குழந்தை தாய் மாமனுக்குச் சில தீங்குகளை விளைவிக்கும் என்று இவ்வின மக்களால் நம்பப்படுகிறது. இதனை,

**‘கொடி சுற்றிப் பிறந்த குழந்தை கோத்திரத்துக்கு ஆகாது’**

**‘மாலை சுற்றிப் பிறந்த மகவு மாமனுக்கு ஆகாது’**

என்ற முதுமொழிகளில் குறிப்பிடுவர். இவ்வாறு கொடி சுற்றிப் பிறந்த குழந்தைக்கு தாய்மாமனால் நிகழ்த்தப்படும் சடங்கொன்றை இவ்வின மக்கள் மேற்கொள்கின்றனர். “கொடி சுற்றிப் பிறக்கும் குழந்தைக்கு குழந்தையின் தாய்மாமன் பொன்னாலான அணிகலன்களுள் ஏதேனும் ஒன்றை எடுத்து வந்து அணிவிக்க வேண்டும். அணிகலன் ஏதேனும் ஒன்றை அணிவிக்காத வரை பிறந்த குழந்தையை தாய்மாமன் காணமுடியாது. குழந்தை பிறந்த பின் தாய்மாமன் பொன்னாலான அணிகலன்களை அணிவிக்கவில்லையெனில் எத்தனை நாட்களாயினும் தாய்மாமன் குழந்தையைக் காணமுடியாது. தாய்மாமன் அணிவிக்கும் பொன்னாலான அணிகலன் மீது மற்றவர்களின் பார்வை படிவதால் குழந்தைக்கும் குழந்தையின் தாய்மாமனுக்கும் ஏற்படும் பாதிப்பு நீங்கும் என்று இவ்வின மக்கள் நம்பிக்கை கொண்டுள்ளதன் அடிப்படையில் இத்தகைய சடங்கு மேற்கொள்ளப்படுகிறது. உறவுகளில் தாய்மாமனின் உறவு என்பது தாய்க்கு அடுத்த நிலையில் வைத்துப் போற்றப்படுவதாலும், சடங்குகளில் தாய்மாமன் முக்கியத்துவம் வாய்ந்தவராகக் கருதப்படுவதாலும் அத்தகைய சிறந்த உறவானத் தாய்மாமன் உறவிற்கு எவ்விதப் பாதிப்பும் நேர்ந்துவிடக்கூடாது என்ற எண்ணத்தின் அடிப்படையில் இத்தகையச் சடங்கு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.”[6] என்று தகவலாளர் சாந்தி அவர்கள் குறிப்பிடுகிறார்.

**கருப்பு வளையல் அணிவித்தல்**

பிறந்த குழந்தைக்கு ஏற்படும் கண்ணேறு கழிக்கும் பொருட்டு கருப்பு வளையல் அணிவிக்கும் வழக்கம் பெரும்பாலும் அனைத்து சமூகத்தினரிடமும் காணப்படுகின்றது. குழந்தை பிறந்த பதினோராம் நாளில் குழந்தைக்கு கருப்பு வளையல் அணிவிப்பர். வளையலணிவித்த அடுத்த நாளிலிருந்து ஒவ்வொரு நாளும்

குழந்தைக்குக் குளிப்பாட்டி முடித்த பின்னர் ஒரு கையில் இருந்து ஒரு வளையலை கழற்றி அவ்வளையலினால் குழந்தையின் தலையை மூன்று முறை சுற்றி அவ்வளையலை தரையில் வீசி உடைத்து விடுவர். பின் அடுத்து வரும் ஒவ்வொரு நாளும் குழந்தையின் கைகளில் உள்ள மற்றொரு வளையலையும் கழற்றி குழந்தைக்குச் சுற்றிப்போட்ட பின் கீழே போட்டு உடைத்து விடுவர். குழந்தைக்கு ஏற்பட்ட கண்ணேறானது வளையல் உடைபடுவதைப் போலச் சிதறிவிட வேண்டும் என்னும் நோக்கம் கருதி இத்தகைய சடங்கு மேற்கொள்ளப்படுகிறது. குழந்தை கைகளை ஆட்டும் பொழுதும் மேலும் கீழும் தூக்கிக் கொண்டு விளையாடும் பொழுதும் கைகளில் உள்ள கண்ணாடி வளையல் உடைந்து குழந்தையின் கைகளில் குத்தும் நிலை ஏற்பட நேரும் என்பதால் குறிப்பிட்ட சில நாட்களிலேயே வளையல்களைக் குளிக்கும் போது பெற்றோர் உடைத்துவிடுகின்றனர்.

மேலும் குழந்தைக்கு காலில் தண்டை, கை மணிக்கட்டில் வசம்பு, கழுத்தில் பால்பாசி மற்றும் கருப்பு வண்ணப் பொட்டு வைத்தல் போன்றவற்றைக் கண்ணேறு கழிக்கும் பொருட்டும் காரணகாரியம் கருதியும் சில அணிகலன்கள் அணிவிக்கப்படுகின்றன. “வசம்பு - பிறந்த குழந்தைக்கு தொற்று எளிதாகப் பரவும் என்பதால் வசம்பு கிருமி நாசினியாகச் செயல்பட்டு குழந்தையைக் கிருமித் தொற்றிலிருந்து காக்கிறது. மேலும் வசம்பு மருத்துவக் குணம் கொண்டதால் குழந்தைக்கு ஏற்படும் வயிறு சார்ந்த நோய்களைக் குணப்படுத்துகிறது. வெள்ளை எருக்கஞ்செடி நார் - எருக்கஞ்செடியின் நாரினை இடுப்பில் அரைஞாண் கயிறு போன்று அணிவிப்பதால் அந்நார் குழந்தைகளின் அருகில் தீய பாதிப்புகளைக் கொண்ட தன்மையுடைய பூச்சிகள் எதுவும் குழந்தையின் அருகில் வராது என்று கருத்தப்படுகிறது.”[7] என்று தகவலாளர் ஜெயலட்சுமி என்பவர் குறிப்பிடுகிறார்.

**மான் கொம்புத் தொட்டில் கட்டுதல்**

பிறந்த குழந்தையைத் குறிப்பிட்ட நாட்கள் கழித்துத் தொட்டிலிடும் போது நல்ல நாள், நேரம் பார்த்துத் தொட்டிலில் இட்டுள்ளனர். இதனைப் பற்றி “பிள்ளைப் பிறந்த பத்தாம் நாள், பன்னிரண்டாம் நாள், முப்பத்திரண்டாம் நாள் முதல் சுபக்கிரகம் உதயமாகப் பஞ்சாங்க யோகம் நன்றாக ஊர்த்துவ முகராசி நட்சத்திரங்களிலே பிள்ளையைத் தொட்டிலில் ஏற்றல் வேண்டும்”[9] என்று அபிதான சிந்தாமணி குறிப்பிடுகிறது. “குழந்தை பிறந்த முதல் பத்து அல்லது பதினைந்து நாட்களுக்குக் கோரைப்பாயில் இலகுவான மிருதுவான துணிகளை விரிப்பாகப் பயன்படுத்தி குழந்தையைப் படுக்க வைப்பர். பின் குழந்தையின் தாய்மாமன் எடுத்துக் கொடுத்த தொட்டிலில் குழந்தையை இடும்போது மான் கொம்பினைப் பயன்படுத்தி தொட்டில்

கட்டுவர். ஆண்குழந்தையானால் வெள்ளை வண்ண வேட்டி கொண்டும், பெண் குழந்தையானால் வெள்ளை வண்ணப் புடவை கொண்டும் தொட்டில் கட்டுவர். மான் கொம்பு வலிமையுடையதாக உள்ளதாலும், மான் கொம்பின் வாசனையை அடிக்கடி குழந்தை சுவாசிப்பதால் குழந்தைக்கு உடல் நலப்பாதிப்புகள் ஏற்படாது என்றும் கருதி தொட்டில் கட்டும் பொழுது மான் கொம்புகள் பயன்படுத்தப்பட்டன. ஆனால் இன்றைய நிலையில் வன விலங்குத் தடைச்சட்டம் நடைமுறையில் உள்ளதன் காரணமாகவும் மான் கொம்புகள் கிடைப்பது மிகவும் கடினம் என்பதாலும் இரும்புச் சங்கிலி கொண்டு தொட்டில் கட்டும் வழக்கம் ஏற்பட்டு மான் கொம்பு கொண்டு தொட்டில் கட்டும் பழம் மரபு இவ்வின மக்களிடம் குறைந்து வருகிறது"[10] என்று தகவலாளர் சண்முகசாமி என்பவர் தரும் களஆய்வுத் தகவலின் வழி அறியமுடிகிறது.

**இழி பெயர்களை இடல்**

குழந்தை பிறப்பிற்குப் பின்னர் பல சடங்குகள் மேற்கொள்ளப்பட்டாலும் குழந்தைக்குப் 'பெயர் சூட்டுதல்' என்ற சடங்கு மிக முக்கியத்துவம் பெற்றதாகக் கருதப்படுகின்றது. "வேட்டுவக் கவுண்டரின மக்கள் குழந்தைப் பிறந்த மூன்று அல்லது ஆறு மாதங்களில் பெயர்சூட்டு விழாவினை நடத்துவர். அவ்வகையில் ஒரு தம்பதியருக்கு முதல் மற்றும் இரண்டு முறை ஒரு குழந்தை பிறந்து மிகக் குறைந்த காலத்தில் இறந்துவிடின் அடுத்துப் பிறக்கும் குழந்தையின் இறப்பைத் தடுக்கும் நோக்கில் குழந்தைக்கு இழிவான பெயர்களைச் சூட்டுவதை மரபாகக் கொண்டுள்ளனர். முதல் குழந்தை இறந்த பின் அடுத்ததாகப் பிறந்த குழந்தை ஆண் குழந்தையாக இருப்பின் 'குப்பன்', 'குப்புசாமி', குப்புராஜ், 'சுப்பன்' போன்ற இழிவான பெயர்களையும், பெண் குழந்தையாக இருப்பின் 'குப்பாயி', 'குப்பம்மாள்', 'சுப்பாயாள் போன்ற இழி பெயர்களையும் இட்டு வழங்கும் வழக்கம் தற்காலத்திலும் நடைமுறையில் உள்ளது. குழந்தையின் இறப்பைத் தடுக்கும் நோக்கில் இத்தகைய இழிபெயர்கள் இடப்படுகின்றன"[11] என்று தகவலாளர் விஜயா என்பவர் கூறும் தகவலாகும்.

**முடியிறக்குதல்**

இறைவனுக்குக் காணிக்கைச் செலுத்தி நன்றி கூறும் வகையில் 'முடியிறக்குதல்' சடங்கு மேற்கொள்ளப்படுகின்றது. முடியிறக்குதல் என்பது குழந்தைப்பேற்றின் முக்கிய நிகழ்வாகும். இச்சடங்கு குழந்தை பிறந்த ஒன்பது அல்லது பதினொரு மாதங்களில் நடைபெறுவதை 'மொட்டையடித்தல்' என்றழைப்பர். குழந்தையின் தந்தைவழிக் குலதெய்வக் கோயிலில் இச்சடங்கு நிகழ்த்தப்படும். குழந்தையின்

தாய்மாமன் இச்சடங்கில் முக்கிய இடம் வகிக்கின்றார். முடியிறக்குதல் அன்று தாய்மாமன் குழந்தைக்குப் புத்தாடை எடுத்து வரவேண்டும். முடியிறக்கும் நாளில் குழந்தையைக் குளிப்பாட்டிப் புத்தாடையயை அணிவித்து தாய்மாமனின் மடியில் அமர வைப்பர். பின் குழந்தைக்கு தந்தையின் குடும்பத்திற்குரிய நாவிதரை அழைத்து வந்து முடியிறக்குவர். முடியிறக்கிய பின் குழந்தையின் தலையில் சந்தனம் குழைத்துப் பூசப்பட்டு கோயிலில் வழிபாட்டுப் பூசைகள் நடத்தப்படும். 'உயிரைக் கொடுத்த சாமிக்கு மயிரைக் கொடு' எனும் நம்பிக்கையினடிப்படையில் உயிரை நன்முறையில் மீட்டுக்கொடுத்த சாமிக்கு உயிருக்கு இணையாகக் கருதப்படும் மயிரைக் கொடுத்து நன்றிக்கடனைச் செலுத்துகின்றனர்.

**காதுகுத்துதல்**

காதுகுத்துதல் என்பது நம் முன்னோர்கள் காலந்தொட்டே இன்றளவிலும் தொடர்ந்து பின்பற்றப்பட்டு வரும் முக்கியச் சடங்காகும். காதுகுத்தும்; சடங்கு பெரும்பாலும் முடியிறக்குதல் சடங்கு செய்யும் நாளில் மேற்கொள்ளப்படுகிறது. முடியிறக்கிய பின்பு குழந்தையைக் குளிப்பாட்டி புத்தாடைகள் அணிவிக்கப்பட்டுக் குழந்தையயைத் தாய்மாமன் மடியில் அமர வைப்பர். தாய்மாமன் எடுத்து வந்துள்ள பொன்னாலான காதணியை ஆசாரியிடம் கொடுத்து குழந்தைக்குக் குத்தச் செய்வர். தொட்டில் கட்டுதல் மற்றும் காதுகுத்தும் சடங்கிற்கு புத்தாடை மற்றும் காதணியை தாய் மாமன் எடுத்துவருவது பற்றி,

**"பட்டெடுங்க தொட்டில் கட்ட ,பவுனெடுங்க காது குத்த**

**காதுகுத்த வருவாராம் ,கருப்புத்தங்கம் உன் தாய்மாமன்"**[12] என ஒரு நாட்டுப்புறப்பாடல் குறிப்பிட்டுள்ளது. இதனடிப்படையில் தாய்மாமன் குழந்தைக்குச் செய்யும் கடமைகள் பற்றி அறியமுடிகின்றது. மேலும் காதுகுத்துதல் என்பது பற்றி, "காது குத்துவதும் குழந்தையின் உடலில் ஏதாவது சிறு காயமொன்றை ஏற்படுத்துவதும் எமனை ஏமாற்றச் செய்யும் தந்திரங்கள். அழகான குழந்தைகளைக் கண்டு எமன் ஆசைப்பட்டு விடுவானாம். எமனை ஏமாற்ற உடலில் சிறுகாயம் ஏற்படுத்தி விட்டால் போதுமாம். இந்த நம்பிக்கை தமிழ்நாட்டில் மட்டுமல்லாமல், மத்திய ஆசியாவிலும், உலகமெங்கும் நிலவி வந்தது."[12] என்று நா.வானமாமலை அவர்கள் குறிப்பிடும் கருத்து காதுகுத்துதல் பற்றிய சடங்கிற்குச் சான்றாகின்றது. அக்கருத்தினடிப்படையில் இன்றைய காலத்திலும் இவ்வின மக்கள் குழந்தையின் தந்தைக்குரிய குலதெய்வக் கோயிலில் முடியெடுத்துக் காதுகுத்துகின்றனர்.முடியிறக்குதல் மற்றும் காதுகுத்துதல் சடங்கு மேற்கொள்ளப்படுவதன் முக்கிய காரணமாக, குழந்தை கருவில் உருவானது முதல்

வளர்ந்து தாயின் வயிற்றிலிருந்து குழந்தை வெளிவரும் வரை குழந்தையின் தலைமுடியில் பல்வேறு தேவையற்ற கழிவுகள் தங்கி அவை தலைமுடியின் வழியாகத் தலைப்பகுதிக்கும், உடல் பகுதிக்கும் சில பாதிப்புகளை ஏற்படுத்திவிடும். அத்தகைய பாதிப்புகளைப் போக்கும் பொருட்டு குறிப்பிட்ட நாட்களில் குழந்தைக்கு முடியெடுத்துக் காதுகுத்துகின்றனர்.

**அரைஞாண்கயிறு அணிவித்தல்**

மனிதன் வேட்டைச் சமூகமாக இருந்தபோது வேட்டைக்குச் செல்லும் போது வேட்டைக் கருவிகளைக் கட்டி வைக்கும் பயன்படு பொருளாக அரைஞாண் கயிற்றைப் பயன்படுத்தினர். அதனடிப்படையில் தங்களின் முன்னோர்கள் பின்பற்றிய மரபாகக் கருதி இத்தகைய அரைஞாண் கயிற்றை பின்வரும் தலைமுறையினரும் அனைவரும் பயன்படுத்தத் தொடங்கி தற்காலம் வரையிலும் அரைஞாண் கயிறு கட்டும் வழக்கம் தொடர்ந்து பின்பற்றப்பட்டு வருகின்றது. அதாவது ஆண்கள் மரம் ஏறுதல், விறகு வெட்டுதல் போன்ற கடினமான வேலைகளைச் செய்ய வேண்டிய காலங்களில் வயிற்றின் மேற்பகுதியிலுள்ள குடல் இறங்காமல் இருக்க வேண்டி அரைஞாண் கயிறு கட்டும் வழக்கம் நடைமுறையில் உள்ளது. குடலிறக்கம் போன்ற நோய்களைத் தடுக்கும் விதமாக இத்தகைய அரைஞாண் கயிறு கட்டப்படுகிறது என்று நாட்டு மருத்துவரும் தகவலாளருமான பழனிச்சாமி என்பவர் குறிப்பிடுகிறார். இத்தகு அரைஞாண் கயிற்றைக் கட்டுவதற்கான அறிவியல் அறிவு பெற்றவர்களாக தம் முன்னோர்கள் திகழ்ந்துள்ளதின் அடிப்படையில் இன்றைய காலங்களிலும் அரைஞாண் கயிறு கட்டும் வழக்கத்தை மக்கள் தம் வாழ்வில் பின்பற்றி வருகின்றனர்.

**பாச்சான்பால் சுற்றுதல்**

“பாச்சான்பால் என்பது இலைகள் அதிகமற்ற ஒரு வகைக் கொடி மரமாகும். இம்மரத்தின் சிறு கிளைகளுள் ஒன்பது பகுதிகள் உள்ள கிளைகளை உடைத்து அவற்றின் நுனிப்பகுதியினை நல்லெண்ணையில் நனைத்து ஒன்பது பருத்திப் பஞ்சினைப் பொருத்துவர். பின் அவற்றில் நெருப்பைப் பற்ற வைத்து குழந்தையின் முன் வலமிருந்து இடமாக மூன்றுமுறை அதனை நீரில் மூழ்கவிட்டு நெருப்பை அணைத்த பின் வீட்டின் அருகில் உள்ள இடத்தில் வீசி விடுவர். இவ்வாறு பாச்சான் பால் சுற்றுவதன் மூலமாகக் அதிலுள்ள புகை வழியாகச் பாச்சான்பாலின் வாசனையைக் குழந்தை நுகர்வதால் குழந்தைக்கு ஏற்படும் சளி, இருமல் சரியாகும் என்ற அடிப்படையில் தம் முன்னோர்கள் பின்பற்றிய இம்முறையை தங்களின் குழந்தைகளுக்கும் மேற்கொண்டு கண்ணேற்றைக் கழிக்கும் வழக்கம் இவ்வின

மக்களிடம் தற்காலத்திலும் வழக்கிலுள்ளது”[14] என்பது தகவலாளர் பவளக்கொடி அவர்கள் கூறும் கள ஆய்வுத் தகவலாகும்.

**மாந்தம் குத்துதல்**

சிறுகுழந்தைகள் அடிக்கடி நோய்வாய்ப்படும். குழந்தைகள் நோய்வாய்ப்பட தாய் உண்ணும் உணவுகளும் ஒரு வகையில் காரணமாகின்றன. குழந்தையின் உடல் நலனில் தாய் உண்ணும் உணவும் முக்கியத்துவம் பெற்றதாக உள்ளது. குழந்தை பிறந்த முதல் மூன்று மாதங்களுக்கு குழந்தைப்பேறு பெற்ற தாய் ஒரு சில உணவுகளை அதாவது விரைவில் செரிமானமாகாத உணவுப் பொருட்கள் ஒவ்வாமையை ஏற்படுத்தக்கூடிய உணவுகள் போன்றவற்றை உட்கொள்ளக்கூடாது. ஏனெனில் குழந்தை பெற்ற தாயின் உடல் சிற்சில மாறுதல்களுக்கு உட்படுகிறது என்ற காரணம் கருதி சில வகை உணவுகளைத் தவிர்க்க வேண்டியது அவசியமாகிறது. அவ்வாறு செரிமானமாகாத உணவுப் பொருட்களைத் தாய் உண்பதன் மூலம் அச்செரிமானமாகாத உணவுப்பொருளின் தன்மை குழந்தைக்கும் தாய்ப்பால் மூலமாகக் கடத்தப்படுவதால் குழந்தைக்கும் உடல் நலன் பாதிக்கப்படுகின்றது. அதன் காரணமாகக் குழந்தைக்கு வயிற்றுப்போக்கு, வயிறு மந்தம் போன்ற பாதிப்புகள் ஏற்படுகின்றன. இதனைச் சரிசெய்ய குழந்தைக்கு ‘மாந்தம் குத்துவர். “வயதில் முதிர்ந்த பெண் ஒருவர் இத்தகைய மாந்தம் குத்தும் செயல்பாட்டை மேற்கொள்வார். மாந்தம் குத்துபவர் தன் பெரு விரலின் நுனிப்பகுதியை பாதிக்கப்பட்ட குழந்தையின் புருவ மத்தியில் வைத்து நன்கு அழுத்திவிடுவர். குழந்தையின் நெற்றியில் நகத்தின் அச்சு விழுமாறு நன்கு அழுத்தமாகக் குத்தவர். பின் காலின் இரண்டு மற்றும் மூன்றாவது விரல்களின் இடையிலும் அழுத்தம் கொடுப்பர். இவ்வாறு புருவ மத்தியிலும், கால் விரல்களின் மத்தியில் அழுத்தம் கொடுப்பதால் வயிற்றுப் பகுதியுடன் தொடர்புடைய நோய்கள் சரியாகிவிடும்”[15] என்று தகவலாளரும் மாந்தம் குத்துபவருமான அம்மாசைக்காள் என்பவர் குறிப்பிடுகிறார். இவ்வாறு மனித உடலில் இருக்கும் குறிப்பிட்ட புள்ளியில் அழுத்தம் கொடுக்கப்பட்டுத் தூண்டப்படுவதால் நமது உடல், தம்மைத் தாமே குணப்படுத்திக் கொள்ளும் என்ற அறிவு சார்ந்த சிந்தனையை இவ்வின மக்கள் தங்கள் குழந்தைகளுக்குப் பயன்படுத்தி வருவதைக் காணமுடிகின்றது.

**கருவில் இறக்கும் குழந்தை**

குழந்தைப்பேறு என்பது ஒரு பெண்ணின் மறுபிறவி போன்றதாகும். கருவுற்ற சமயத்தில் ஒரு சில கருவுற்ற பெண்கள் கருவுற்ற சூழலிலோ அல்லது மகப்பேறு பெறும் சூழலிலோ உயிரிழப்பையும் சந்திக்க வேண்டியுள்ளது. அவ்வாறு கருவுற்ற

பெண் இறந்துவிட்டால் அப்பெண்ணை குழந்தையுடன் புதைப்பதில்லை. மாறாக வயிற்றில் உள்ள குழந்தையைத் தனியாக எடுத்து அக்குழந்தையின் உடலில் காரை மரம் எனப்படும் ஒரு வகை மரத்தின் முள்ளைக் கொண்டு சிறிய காயம் ஒன்றினை ஏற்படுத்திய பின்னர் தாயையும், குழந்தையையும் தனித்தனியாகவோ, ஒன்றாகவோ இணைத்து புதைத்துவிடும் மரபு தொன்றுதொட்டு இவ்வின மக்களிடம் பின்பற்றப்பட்டு வருவதைக் காணமுடிகிறது. பிறந்த குழந்தை இறந்துவிட்டாலோ அல்லது சதைப்பிண்டமாக பிறந்துவிட்டாலும் அக்குழந்தையை ஆள் அன்று என்று எண்ணி புதைப்பதற்கு முன் வாளால் காயப்படுத்துவர் என்பதனை,

**“குழவி இறப்பினும் ஊன்தடி பிறப்பினும்**
**ஆள் அன்று என்று வாளின் தப்பார்”** [16]

என்னும் புறநானூற்றுப் பாடலடிகளின் மூலமாக அறியமுடிகிறது. இவ்வாறு ஒரு குழந்தை கருவில் உருவாகிவிட்டாலே அதுவும் ஒரு ஆள் என்று எண்ணும் வழக்கம் உள்ளதால் இவ்வின மக்கள் இறந்த குழந்தையை சிறு காயம் ஏற்படுத்தி அதனை விழுப்புண் பெற்ற குழந்தையாகக் கருதி புதைக்கும் வழக்கத்தைத் தம் மரபாகக் கருதுகின்றனர்.

**கர்ப்பிணிப்பெண் இறப்பு**

முற்காலங்களில் வழியில் செல்பவர்கள் ஓய்வு எடுக்கவும், வழிப்போக்கர்கள் அமர்ந்து செல்லவும் ஏதுவாக சுமைதாங்கிக் கற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. வேட்டுவக் கவுண்டரின மக்களிடமும் சுமைதாங்கிக்கல் நடும் வழக்கம் தற்காலத்திலும் நடைமுறையில் உள்ளது. ஒரு பெண் கருவுற்றிருக்கும் சூழலில் ஏதேனும் ஒரு காரணத்தினாலோ அல்லது நோய்த்தாக்குதலால் இறந்துவிட்டால் அப்பெண்ணிற்கு உரிய சடங்குகள் மேற்கொள்ளப்பட்ட பின் சில் நாட்கள் கழித்து சாலை ஓரங்களிலோ, ஏதேனும் ஒரு பொது இடத்திலோ கர்ப்பிணிப் பெண்ணின் நினைவாக சுமைதாங்கிக் கல் ஒன்றினை நடுவர்.

**முடிவுரை**

ஒரு குறிப்பிட்ட நிகழ்வினைத் தொடர்ந்து மேற்கொண்டு வருவதன் மூலம் அவை நாளடைவில் சடங்கு என்ற நிலைத்த தன்மையைப் பெற்று பின் அவை பண்பாடாகச் சமூகத்தில் நிலவுகின்றன. மனிதனின் பரம்பரையை வளரச் செய்வது அவர்களின் குழந்தைப்பேறு ஆகும். அதனடிப்படையில் மனிதச் சமூகத்தில் குழந்தைப்பேறு என்பது மிகவும் இன்றியமையாததாக கருதப்பட்டுப் பல வகையானச் சடங்குகள் மேற்கொள்ளப்படுகின்றன. தற்காலத்தில் ஏற்பட்டுள்ள பலவகையான தொழில்நுட்ப வளர்ச்சிகள் மக்களிடம் பல மாற்றங்களை ஏற்படுத்தியுள்ள போதிலும்

தம் முன்னோர்கள் காரணகாரியத்துடன் பின்பற்றிய மரபுகளை அழிக்காமல் இவ்வின மக்கள் காத்து வருகின்றனர் என்பது அக்கட்டுரையின் முடிவாக அமைகிறது.

**துணைநூற்பட்டியல்**

1.நாராயணசாமி, திருக்குறள் இனிய உரை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், அம்பத்தூர், சென்னை, முதற்பதிப்பு – 1997.

2.தகவலாளர், பத்மா,பெண், வயது - 51, கோப்பம்பாளையம், 8 ஆம் வகுப்பு, தகவல் சேகரிக்கப்பட்ட நாள் : 10.05.2019.

3.தகவலாளர்,சித்ரா,பெண்,வயது- 49, கொண்டையம்பாளையம், 10ஆம்வகுப்பு, தகவல் சேகரிக்கப்பட்ட நாள் : 13.05.2019.

4.பாலகிருட்டிணன்.மு, கண்ணேறு கழித்தல், பூங்கொடி பதிப்பகம், மயிலாப்பூர், சென்னை, முதற்பதிப்பு – 2010.

5.தகவலாளர்,அலமேலு,பெண்,வயது-74,சங்கம்பாளையம், 12 ஆம் வகுப்பு, தகவல் சேகரிக்கப்பட்ட நாள் : 17.06.2019.

6.தகவலாளர் பூங்கொடி, பெண், வயது - 48, மில்மேடு, 10 ஆம் வகுப்பு, தகவல் சேகரிக்கப்பட்ட நாள் : 03.06.2019.

7.தகவலாளர் ஜெயலட்சுமி, பெண், வயது - 65, உக்கரம், தகவல் சேகரித்த நாள் : 21.06.2019.

9.சிங்காரவேலு முதலியார், அபிதான சிந்தாமணி, ஏசியன் எடுகோனஸ் சர்வீஸஸ், புதுதில்லி, முதற்பதிப்பு – 1981.

10.தகவலாளர், சண்முகசாமி, ஆண், வயது - 52, சத்தியமங்கலம், தொழிற்படிப்பு, தகவல் சேகரி க்கப்பட்ட நாள் : 23.06.2019.

11.தகவலாளர், விஜயா, பெண், வயது - 45, மதிப்பானூர், தகவல் சேகரித்த நாள் : 09.07.2019.

12.வானமாமலை.நா.தமிழர் நாட்டுப் பாடல்கள், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை, முதற்பதிப்பு -1975

13.தகவலாளர், சுப்பாயாள், பெண், வயது - 72, சத்தியமங்கலம், தகவல் சேகரித்த நாள் : 29.06.2019.

14.தகவலாளர், பவளக்கொடி, பெண், வயது - 51, சாணார்பாளையம், தகவல் சேகரிக்கப்பட்ட நாள் : 10.07.2019.

15.தகவலாளர், அம்மாசைக்காள், பெண், வயது 87, வண்டிபாளையம், தகவல் சேகரிக்கப்பட்ட நாள் : 15.07.2019.

16.துரைசாமிப்பிள்ளை.ஔவை.சு.,புறநானூறு, திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற் பதிப்புக்கழகம் லிமிடெட், சென்னை, முதற்பதிப்பு – 1947.